# FOR THE SAKE  OF HONOUR

# 2002




த. ஸ்டாலின் குணசேகரன் ஆறாண்டுகள் அரிதின் முயன்று இரண்டு பாகங்களும் 1152 பக்கங்களும் அடங்கிய ' விடுதலை வேள்வியில் தமிழகம் ' என்ற நூலைத் தொகுத்தும் பதிப்பித்தும் வெளியிட்டதை அங்கீகரித்தும் பாராட்டியும் இவருக்கு ரோட்டரி சங்கத்தின் மிக உயரிய விருதான

' For Tha Sake Of Honour ' என்ற விருது வழங்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி 05.12.2002 ஆம் தேதி ஈரோடு ஹோட்டல் கிளப் மேலாஞ்ச் திறந்த வெளி மைதான மேடையில் நடைபெற்றது. ரோட்டரி சங்கத்தின் ஆளுனர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த திரு குரியாச்சன் அவர்கள் விருது வழங்கினார்.

Rotery Club Of Erode Cosmos இன் தலைவர் பொறியாளர் ஆர். மோகன்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இச்சங்கத்தின் பட்டயத் தலைவரும் செங்குந்தர் கல்வி

நிறுவனங்களின் தாளாளருமான திரு ஜெ. சுந்தானந்தன் அவர்கள் கௌரவ விருந்தினராகப் பங்கேற்றுப் பராட்டுரை நிகழ்த்தினார்.

இவ்விருதுடன் கூடுதல் அங்கீகாரமாக விருதாளரை மேலும் சிறப்பிக்கும் விதத்தில் ரோட்டரி சங்கத்தின் கௌரவ உறுப்பினராக இவ்விழாவில் ஆளுனரால் த. ஸ்டாலின் குணசேகரன்  அறிவிக்கப்பட்டார்.

